2015

No. of Printed Pages : 5

2015

203067

**4911**

Register Number

இரண்டாமாண்டு

# தமிழ்மொழி கற்பித்தல்

நேரம் : 3 மணி

மொத்த மதிப்பெண்கள் : 100

**அறிவுரை :** (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்குப் பயன்படுத்த வேண்டும்.

## பகுதி - அ

**I.** **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **10x2=20**

**1.** வினையெச்சம் என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.

**2.** பேச்சாற்றலை வளர்ப்பதற்கு வழங்கப்படும் பயிற்சிகளை எழுதுக.

**3.** தற்குறிப்பேற்ற அணியைச் சான்றுடன் விளக்குக.

**4.** நல்லார் செயுங்கேண்மை நாடோறும் நன்றாகும்
அல்லார் செயுங்கேண்மை ஆகாதே - நல்லாய் கேள் !
காய் முற்றின் தின்தீங் கனியாம் இளந்தளிர் நாள்
போய்முற்றின் என்னாகிப் போம் ?

- நன்னெறி

இப்பாடலின் கருத்தினை எழுதுக.

**5.** பின்வரும் பத்தியைப்படித்து வினாக்களுக்கு விடையளிக்க.

உடலும் வேண்டும், உள்ளமும் வேண்டும் என்று இரண்டையும் வரமாகவும் தூய்மையாகவும் காப்பதே கடமையாகும். மரம் வானளாவ உயர வேண்டியதாக இருக்கலாம்; ஆனால், தான் வேரூன்றிய மண்ணை மறந்து வாழ முடியாது. வானைப் புறக்கணித்துக் கிளைகளை உயர்த்தாமல் வாழவும் முடியாது.

(i) இப்பத்தியின் மையக்கருத்து யாது?

(ii) இப்பத்தியில் இடம் பெறும் அருஞ்சொற்களை எழுதுக.

[ Turn over

6. 'முட்குறை' - இச்சொல்லைப் பிரித்தெழுதிப் புணர்ச்சி விதி தருக.

7. 'செயப்படு பொருளைச் செய்தது போலத்
தொழிற்படக் கிளத்தலும் வழக்கினுள் உரித்தே'
(- நன்னூல் 400)

இந்நூற்பாவிற்கு விளக்கம் கூறி, எடுத்துக்காட்டுத் தருக.

8. மரூஉ என்றால் என்ன? எடுத்துக்காட்டுத் தருக.

9. தேன் + நன்மை - இச்சொல்லை சேர்த்தெழுதிப் புணர்ச்சி விதி கூறுக.

10. வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சாரல் நாட செவ்வியை யாகுமதி
யாரஃதறிந்திசி னோரே சாரற்
சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கிவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே.

- (குறுந்தொகை)

இப்பாடலின் பொருள் நயத்தை எழுதுக.

II. எவையேனும் **ஐந்து** வினாவுக்கு, ஒவ்வொன்றுக்கும் **200** சொற்களுக்கு மிகாமல் விடையளிக்க. **5x4=20**

11. சிறுகதை எழுதுவதற்கு முன்னோடிச் செயல்களாகப் பின்பற்ற வேண்டியவை யாவை?

12. பதினான்கு, எண்பதினாயிரம் - இச்சொற்களைப் பிரித்தெழுதிப் புணர்ச்சி விதி தருக.

13. தொகாநிலைத்தொடர் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

14. தன்வினை பிறவினை வாக்கியங்களாக மாறும் முறைகளை எடுத்துக் காட்டுகளுடன் விளக்குக.

**15.** பின்வரும் பாடலைப் படித்து, அதில் இடம்பெற்றுள்ள நயங்களைக் குறிப்பிடுக.

ஆற்று வெள்ளம் நாளை வரத்தேற்று தேகுறி - மலை
யாளமின்னல் ஈழ மின்னல் சூழமின்னுதே
நேற்றும் இன்றும் கொம்பு சுற்றிக் காற்றடிக்குதே - கேணி
நீர்ப்படு சொறித் தவளை கூப்பிடுகுதே
சேற்று நண்டு சேற்றைக் குழைத்து ஏற்றடைக்குதே - மழை
தேடி ஒருகோடி வானம்பாடி ஆடுதே
போற்று திருமால் அழகர்க்கு ஏற்றமாம் பண்ணைச் - சேரிப்
புள்ளிப் பள்ளர் ஆடிப்பாடித் துள்ளிக் கொள்வோமே !

(முக்கூடற்பள்ளு)

**16.** கீழ்க்காணும் உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.

''புதிதாகப் பழகும்போது பெரும்பாலோர் நன்றாகப் பழக முடியும். அதில் ஒன்றும் சிறப்பு இல்லை; திறமை இல்லை, புதிய மாணவர் ஒழுங்காக நடந்து கொள்வர். புதிய ஆசிரியர் பாடுபட்டுக் கற்றுக் கொடுப்பர், புதிய வியாபாரி நல்ல சரக்கு விற்பார். புதிய வேலைக்காரி நன்றாக உழைப்பாள். புதிய பால்காரன் நல்ல பால் தருவான். புதிய நட்பும் இனிமையாக விளங்கும். அதில் ஒரு சிறப்பும் இல்லை. இந்தப் புதுமையை எள்ளி நகையாடுவதுபோல் ஆங்கிலத்தில் ஒரு பழமொழி இருப்பது உனக்கு நன்கு தெரியும். 'புதிய துடைப்பம் நன்றாகப் பெருக்கும்' என்னும் அந்தப் பழமொழி வேடிக்கையாக இருந்தாலும் கருத்து உடையதுதான், அதற்கு மாறாக, எவ்வளவு பழமை ஆனபோதிலும் சிறப்புக் குன்றாமல் ஒளிவிடும் வாழ்க்கைதான் நல்ல வாழ்க்கை, மற்றையது பொன்முலாம் பூசிய பொருள்போல் தொடக்கத்தில் மட்டுமே நல்ல ஒளி வீசுகிறது. உண்மையான பொன்னால் செய்யப்பட்ட பொருள் ஒரு நாளும் அப்படி ஆகாது அல்லவா? பழகப் பழக, தேயத்தேய அது குன்றாது ஒளிவீசும் அல்லவா? அதுபோல் வாழும் வாழ்க்கையே நல்லவர்களின் குறிக்கோளாக இருக்க வேண்டும்.

(i) இப்பத்தியின் கருத்து யாது?

(ii) நல்லவர்களின் குறிக்கோளாகக் கூறப்படுவது யாது ?

(iii) பொன்முலாம் பூசிய பொருள் என்று கூறப்படுவது யாது ?

(iv) இப்பத்தியில் வந்துள்ள அருஞ்சொற்களுக்குப் பொருள் கூறுக.

17. உவமையணிக்கும், எடுத்துக்காட்டு உவமையணிக்கும் உள்ள வேறுபாட்டினை எடுத்துக்காட்டுத் தந்து விளக்குக.

18. 'ஐந்தொகை மொழிமேல் பிறதொகல் அன்மொழி' -நன்னூல் 369

- இந்நூற்பாவிற்கு விளக்கம் கூறி, எடுத்துக் காட்டு தருக.

## பகுதி - ஆ

III. கீழ்க்காணும் **ஒவ்வொரு** வினாவிற்கும் **100** சொற்களுக்கு மிகாமல் விடையளிக்க.

**10x2=20**

19. சமூகவயமாக்கல் என்பது யாது? மாணவனின் சமூகவயமாக்கலுக்குக் கற்பிக்கப்பெறும் பாடப்பொருள்களைக் குறிப்பிடுக.

20. ஒரு வேர்ச்சொல்லிலிருந்து பல சொற்கள் உருவாக்கும் உத்தியைக் கொண்டு சொற்களஞ்சியத்தை எவ்வாறு பெருக்குவிர்?

21. அலுவலகக் கடிதம் எழுதும் படிநிலைகளைக் கூறுக.

22. பிழைகளை எவ்வாறு வகைப்படுத்தலாம்?

23. 'நீங்கள் எல்லாரும் சுற்றுலா போய் வந்தார்கள்' என்று நீ எழுதியிருந்தாய் - இவ்வாக்கியத்திலுள்ள பிழையைச் சுட்டிக் காரணத்தைக் குறிப்பிடுக.

24. பயனாளர் தம் தேவைக்கேற்பப் பயன்படுத்திக்கொள்ள வடிவமைக்கப் பட்டுள்ள தமிழ் விசைப்பலகைகள் பற்றிக் குறிப்பிடுக.

25. மொழிப்பயிற்றாய்வுக் கூடங்களில் பின்பற்றப்படும் கற்பித்தல் முறைகள் யாவை?

26. இணையத் தொடர்பு பெற ஒன்றிணைக்க வேண்டிய பொருள்கள் யாவை?

27. பிழை நீக்கல் பயிற்சி என்றால் என்ன? அதன் அவசியத்தைக் குறிப்பிடுக.

28. புரிதல் திறன் வினாக்கள் எவ்வாறு அமைக்கப்படல் வேண்டும்?

IV. எவையேனும் **ஐந்து** வினாக்களுக்கு ஒவ்வொன்றுக்கும் **200** சொற்களுக்கு மிகாமல் விடையளிக்க. **5x4=20**

29. பாட ஏற்பாடு, பாடத்திட்டம், பாடநூல் இவற்றுக்கிடையேயான தொடர்பினை விளக்குக.

30. தாமரை, குழந்தை, பெண், நீர்நிலை - இவற்றினைக் குறிக்கும் பல சொற்களைக் கூறுக.

31. ஒரு சொல்லிலுள்ள எழுத்துகளைக் கொண்டு புதிய சொற்களை உருவாக்கிச் சொற்களஞ்சியம் பெருக்கலாம் என்பதற்கு நான்கு எடுத்துக்காட்டுகள் தருக.

32. செந்தொடை என்றால் என்ன? எடுத்துக்காட்டுத் தருக.

33. மாணவர்கள் செய்யும் சொல்லிலக்கணப் பிழைகளை வகைப்படுத்துக.

34. வரிவடிவப் பிழைகளைத் தவிர்க்க நீவீர் எத்தகு பயிற்சியினை மேற்கொள்வீர்?

35. தமிழ் இணையப் பண்பாட்டுச் செய்திகளை எழுதுக.

36. கணினிவழிக் கல்வியின் தேவையினை விளக்குக.

V. ஒவ்வொரு வினாவுக்கும் **ஐந்நூறு சொற்களுக்கு** மிகாமல் விடையளிக்க. **2x10=20**

37. (அ) பாட ஏற்பாடு, பாடத்திட்டம், பாடநூல் ஆகியவற்றை விளக்குக. பாட நூலை நீவீர் எவ்வாறு பயன்படுத்துவீர் என்பதை விவரிக்க.

**அல்லது**

(ஆ) தொடக்க நிலையில் கவிதை எழுதும் திறனை வளர்க்கும் உத்திகளை விவரிக்க.

38. (அ) 'பல்லூடகப் பயன்பாட்டின் வழியாகத் தமிழ் மொழியினைச் சிறப்பாகக் கற்பிக்க இயலும்' - இக்கூற்றினை நிறுவுக.

**அல்லது**

(ஆ) நல்ல தேர்வின் இன்றியமையாப் பண்புகளைப் பற்றி விவரிக்க.

- o O o -